www.tamilarangam.net

LTTE (UK Branch)
B.M. BOX 5973
LONDON WC1 3XX

அன்பளிப்பு ரூ-1

# உறுமல்

நாள்: 16-07-1986 தமிழீழச் செய்திகள் வெளியீடு: 03

விடுதலைப் புலிகள் நடத்திய வெற்றிக்கரமான தாக்குதலில்

# மாங்கேணி இராணுவமுகாம் தரைமட்டம்!

## கேர்ணல் உட்பட 10 இராணுவத்தினர் பலி !!

மட்டக்களப்பு மாவட்டம் மாங்கேணி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவ முகாமின் மூன்று கட்டிடங்கள் தகர்க்கப்பட்டதுடன் மூன்று இராணுவ முகாம்களுக்குப் பொறுப்பான கர்னல் மல்பாவா உட்பட 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அத்துடன் தாக்குதலுக்குள்ளான முகாமுக்கு உதவிக்கு வந்த கொமாண்டோ போலீசாரைத் தடுத்து நிறுத்தி விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 5 கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டதில் மாங்கேணி என்ற இடத்தில் மட்டகளப்பு - திருமலை இணைப்பு வீதியில் கடல் ஓரமாக இயங்கி வந்த இராணுவ முகாம் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிரடிப்படை 5-7-86 நள்ளிரவு 11-45 மணியளவில் தாக்குதலைத்தொடுத்தது. சனிக் கிழமை நள்ளிரவு முதல் ஞாயிறு அதி காலை வரை சுமார் 3 மணி நேரம் நடந்த கடுமையான தாக்குதலில் விடுதலைப் புலிகள் ராக்கட் லோஞ்சர் G. P. M. G, மோட்டார் உட்பட பல நவீன ஆயுதங்களைப் பயன்படுத்தினர்.

அருகே உள்ள வாகரை, கதிரவெளி கல்லடி கும்புறுமுனை ஆகிய ஆயுதப்படை முகாம்களிலிருந்து உதவிக்கு இராணுவம் வருவதைத் தடுப்பதற்காக விடுதலைப் புலிகள் இடையில் இருந்த பனிச்சங்கேணிப் பாலத்தைத் தகர்த்தனர். அதனால் மாங்கேணி இராணுவத்தினருக்கு வெளி உதவி வர முடியாத நிலை ஏற்பட்டது.

அதேபோல வாகனேரி இராணுவ முகாமிலிருந்தும் இராணுவத்தினர் வர முடியாதபடி வாழைச்சேனை வீதியில் உள்ள மதகு ஒன்றையும் எமது வீரர்கள் குண்டு வைத்துத் தகர்த்தனர். அதேவேளை கெலிகொப்டர் ஒன்று அந்த இடத்துக்கு விரைந்து தாழப் பறந்து துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்ட போது விடுதலைப்புலிகள் ராக்கட்லோஞ்சர் கொண்டு எதிர்த் தாக்குதல் நடத்தவே கெலிகொப்டர் மேலே எழும்பிச் சென்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் செய்தி வெளியீட்டுப் பிரிவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புலிகளின் தாக்குதலுக்குள்ளான மாங்கேணி இராணுவ முகாமுக்கு வந்த ஹெலிகொப்டர் இறங்குவதற்கான சிக்னலைக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

உக்கிரமாக நடைபெற்ற தாக்குதலின் பின்பு முட்கம்பி வேலியை வெட்டிக்கொண்டு முகாமின் இடது பக்கமாக உட்புகுந்த விடுதலைப் புலிகள் உள்ளே இருந்த மூன்று பாரிய கட்டிடங்களை முற்றாகத் தகர்த்தனர். முகாமினுள் இருந்த இராணுவத்தினர் அனைவரும் இடிபாடுகளிடையே சிக்கிக் கொண்டனர். தாக்குதலுக்குள்ளான முகாமுக்கு அருகே செல்லும் பாதைகளிலுள்ள பாலங்களை எம்மவர்கள் முன்னரே தகர்த்ததனால் வேறு முகாம்களிலிருந்து இம்முகாமிற்கு தரை மார்க்கமாக உதவிகள் கிடைப்பதில் தடை ஏற்பட்டது.

எம்மால் தகர்க்கப்பட்ட கட்டிடங்களின் இடிபாடுகளிடையே சிக்கிக் கொல்லப்பட்டவர்களில் மூன்று இராணுவ முகாம்களுக்குப் பொறுப்பதிகாரியான கேர்ணல் மல்பாவாவும் ஒருவர். இத்தாக்குதலில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 15 பேர் படுகாயமுற்றனர்.


இம்முகாம் மீதான தாக்குதலின்போது வாழைச்சேனை போலீஸ் நிலையத்திலிருந்து வாகனங்களில் கொமாண்டோக்கள் இம்முகாமுக்கு உதவிக்காகப் புறப்பட்டபோது எமது வீரர்கள் குண்டு வீசித் தாக்கியதில் கொமாண்டோக்கள் தரப்பில் பெரும்உயிர்ச் சேதமும் காயங்களும் ஏற்பட்டன. எமது வீரர்களால் தகர்க்கப்பட்ட காயங்கேணிப் பாலத்தைச் சீர்செய்வதற்காகப் போலீஸ் கொமாண்டோக்கள் பாலத்தில் நின்றபோது முன்னரே எம்மால் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் நான்கு கொமாண்டோக்கள் கொல்லப்பட்டதுடன் மூன்று பேர் படுகாயமடைந்தனர்.

கடந்த மாதம் 27 ம் திகதி மட்டக்களப்பிலுள்ள கிரான் என்னுமிடத்தில் அமைந்த எமது முகாமைச் சுற்றி வளைத்து தாக்குதலில் ஈடுபட்டவர்களில் மாங்கேணிமுகாமைச் சேர்ந்த இராணுவத்தினர்களே முன்னின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகளுக்குச் செல்வாக்கு இல்லை என்று சொல்லிக் கொண்டிருந்தவர்களின் பொய்யுரைகளுக்கு விடுதலைப்புலிகளின் இத் தாக்குதல் பதிலடியாக அமைந்திருக்கிறது. வடக்கு மட்டுமல்ல கிழக்கு மாகாணத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வல்லமை படைத்த இயக்கம் என்பதை இத் தாக்குதல் வெளிப்படுத்தியுள்ளது.

## விடியலுக்கு முந்திய மரணங்கள்

**தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன் முதலாக இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் கொக்கிளாய் இராணுவ முகாமிலாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய இத்தாக்குதல் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு வீர காவியமாகும் 134 சிங்கள இராணுவத்தினரைப் பலி கொண்ட இத்தாக்குதலில் 17 இளம் புலிகளின் தியாக வரலாறும் அடங்கியிருக்கிறது. இந்த வீர காவியம் ஒவ்வொரு "உறுமலிலும்" 5ம் 6ம் பக்கங்களில் தொடர்ந்து வெளிவருகிறது.**

# களத்தில் உயிர்நீத்த விடுதலைப் புலிகள்



பிரபுதாஸ்
பாக்கிய நாதன்
வில்லியம் ரஞ்சித்
(அங்கிள், அன்ரனி)

**தோற்றம் — 21-06-50**
**மறைவு — 18-05-86**

**இயக்கச்சியில் சிங்கள இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீர மரணமடைந்தார்.**

புங்குடுதீவு கிழக்கைச் சேர்ந்த
நா. அலிகரன்
(அலி)

**தோற்றம் — 08-05-67**
**மறைவு — 17-05-86**

**காவலூரில் அரச கடல்படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போர் முனையில் புலிகள்

## 16-6-86


அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில், சிங்கள இனவாத அரசு மேற்கொண்ட படையெடுப்பு படுதோல்வியில் முடிந்ததையடுத்து, அரச படை வெளியே புறப்படப்பயந்து தமது முகாமிற்குள்ளேயே பதுங்கியிருக்கின்றது. இப்பொழுது கிளிநொச்சி மாவட்டம் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றது. எனினும் சிங்களப்படையினர் சர்வதேசப் பயங்கரவாதிகளான மொசாட்டின் ஆலோசனையின்படி அடிக்கடி முகாமை விட்டு வெளியேவந்து தமிழ்மக்களின் சொத்துடமைகளை நாசமாக்க முனைகின்றார்கள். எனவே இதனைத் தடுப்பதற்காக இராணுவத்தினர் பயன்படுத்தும் உருத்திரபுரம் பாலத்தைப் புலிகள் தகர்த்தனர். இதனால் இராணுவத்தினரின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதுடன், பொதுமக்களின் சேதத்தையும் தவிர்க்க முடிந்தது.

தமிழீழத்தின் வடபகுதியில் அமைந்துள்ள கடற்கரையோர நகரமான வல்வெட்டித்துறை மீது ஸ்ரீலங்காவின் முப்படைகளும் சமீபத்தில் மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைப் புலிகள் முறியடித்ததையடுத்து, நகரில் நிலவிய அமைதியைக் குலைப்பதென இராணுவத்தினர் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்றார்கள். நகரின் மேற்குப்புறத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமிலிருக்கும் இராணுவத்தினர் அடிக்கடி வெளியே தலைநீட்டிப் புலிகளிடம் முறையாக வேண்டிக்கொள்கிறார்கள். இவ்வகையில் 18.6.86 அன்று முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினருடன் புலிகள் கடுமையாக மோதினார்கள். புலிகளின் அதிரடித் தாக்குதலில் 05 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் மேலும் சிலர் படுகாயமடைந்தனர். நகரின் அமைதியைக் குலைக்கப் புறப்பட்ட இராணுவத்தினர் பீதியடைந்த நிலையில் தமது முகாமிற்கு மீண்டும் திரும்பினார்கள்.

தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்குச் சிங்கள அரசு கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்றது. இதன் ஒரு பகுதியாகத் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைச் சிங்கள அரசு உருவாக்கி வருகின்றது. இந் நடவடிக்கையானது ஜோர்டானின் மேற்குக்கரையில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த அரபு மக்களை அடித்து விரட்டி, அவர்களைக் கொலை செய்து, அங்கு சியோனிசப் பயங்கரவாதிகளான இஸ்ரேலிய யூதர்கள் தமது குடியேற்றங்களை ஏற்படுத்திய சம்பவத்திற்கு ஒப்பானது. இதேபோலவே இஸ்ரேலிய மொசாட்டின் ஆலோசனைப்படி தமிழ் மாவட்டத்திலுள்ள வவுனியாவில் உள்ள உழுக்குளம் என்னுமிடத்தில் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இக் குடியேற்றங்களிற்குக் காவலாகக் கடைந்தெடுத்த சிங்களக் காடையர்கள் இருந்து வருகிறார்கள். இவர்கள் அப்பாவித் தமிழ் மக்கள்மீது மிருகத்தனமான தாக்குதலை மேற்கொண்டு வருகிறார்கள். புலிகள் இவற்றையெல்லாம் பார்த்துக் கைகட்டிக் கொண்டு இருக்கவில்லை. 16-06-86 அன்று உழுக்குளத்தில் மூன்று ஊர்காவல்படையினர் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து இரு வேட்டைத் துப்பாக்கிகள் எம்மால் கைப்பற்றப் பட்டன.

## 18-06-86

கொக்காவில் கூட்டு இராணுவ முகாமிலிருந்த சிங்களப்படைகள் கிளிநொச்சி நகரின் மீது தாக்குதலை மேற்கொள்ளப் புறப்பட்டனர். படைகளின் நோக்கத்தைப்புரிந்து கொண்ட புலிகளின் கெரில்லா அணி இராணுவத்தை இடைவழியில் மறித்துத் தாக்கியது. சிலமணிநேரம் இருதரப்பினருக்கும் இடையில் நடைபெற்ற உக்கிரமான போரையடுத்து இராணுவத்தினர் பலத்த உயிரிழப்பின் மத்தியில் தமது முகாமிற்கு மீண்டனர்.



தொடர்ந்து வல்வெட்டித்துறை நகரை அழிப்பதற்குச் சிங்களப்படைகள் முயன்று வருகின்றன. 18ந் தேதி நண்பகல் 10 மணியளவில் சுமார் 75 இராணுவத்தினர் முகாமிலிருந்து புறப்பட்டனர். இவர்கள் மேற்குப்புறமாக நகர்ந்து சுமார் 100 மீற்றர் தூரம் செல்வதற்குள் புலிகள் இடைமறித்துத் தாக்குதலை மேற்கொண்டார்கள். இராணுவத்தினருக்கு உடல், உளவியல் ரீதியாகத் தாக்கத்தைக் கொடுக்கும் கண்ணிவெடித் தாக்குதலைப் புலிகள் மேற்கொண்டனர். இச்சம்பவத்தில் 3 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் சிலர் மோசமாகக் காயமடைந்தனர். இதனையடுத்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இராணுவத்தினர் முகாமிற்குள் சென்று பதுங்கினார்களாயினும் இனப்படுகொலை மேற்கொள்ளும் தமது எண்ணத்தை மாற்றவில்லை. 18-06-86 அன்று இரவும் அவர்கள் முகாமை விட்டுப் புறப்பட்டனர். இவர்களிற்கெதிராகப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதலைத் தொடுத்தனர். இதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதனையடுத்து இடம்பெற்ற கடும் துப்பாக்கிச் சண்டைக்கு ஈடுகொடுக்க முடியாத சிங்களப்படையினர் தமது பாசறைக்குப் பின்வாங்கினார்கள்.

## 19-06-96

தமிழீழத்தின் உணவு உற்பத்தியில் முதன்மை பெற்று விளங்கும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சீர்குலைப்பதற்குச் சிங்கள அரசு முயன்று வருகின்றது. 19-06-86 அன்று கிளிநொச்சி இராணுவமுகாமிலுள்ள சிங்களப்படை இருவேறு பிரிவுகளாகப் புறப்பட்டுத் திருநகர், ஜெயந்திநகர் ஆகிய கிராமங்களை முற்றுகையிட முனைந்தனர். இராணுவத்தினரது நடமாட்டத்தை அறிந்த புலிகளின் இரு கெரில்லா அணிகள் திருநகரிலும், ஜெயந்திநகரிலும் இராணுவத்தை எதிர்கொண்டனர். நூற்றியம்பதிற்குமதிகமான இராணுவத்தினர் கவசவாகனங்கள் சகிதம் திருநகரிற்கு வந்துகொண்டிருந்தபோது எமது கெரில்லா அணி அதிர்ச்சித் தாக்குதலை தொடுத்தது. எமது றொக்கற் தாக்குதலினால் கவசவாகனமொன்று முற்றாகச் சேதமடைந்தது. அதிலிருந்த அனைத்து இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர். அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கடும் யுத்தத்தில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 7 பேர் மோசமாகக் காயமடைந்தனர். இறுதியில் எமது தாக்குதலிற்கு ஈடுகொடுக்க முடியாத படையினர் இறந்த காயமடைந்த இராணுவத்தினர்களைத் தூக்கிக்கொண்டு பின்வாங்கிச் சென்றார்கள். இதே வேளையில் ஜெயந்தி நகரிற்குச் சென்ற சிங்களப் படைகளைப் புலிகளின் மற்றுமொரு கெரில்லா அணி சுற்றிவளைத்துக் கொண்டது. காலை 11மணியிலிருந்து பலமணி நேரமாகச் சண்டை தொடர்ந்து நடைபெற்றது. இராணுவத்தினர் தரப்பில் பலர் இறந்தும், காயமடைந்தும் காணப்பட்டனர். தாக்குதலைத் தொடர முடியாத இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றார்கள். இவ்விரு தாக்குதல்களிலும் ரவைகள், மோட்டார் செல்கள் போன்றன எம்மால் கைப்பற்றப்பட்டன.

புலிகள் தமது அதிரடித் தாக்குதல்களினால் இராணுவத்தினரை உளவியல் ரீதியாகப் பாதிப்படையச் செய்ததுடன் அவற்றில் வெற்றியும் கண்டுள்ளார்கள். 19-06-86 அன்று முல்லைத்தீவு முகாமிலிருந்த இருநூற்றிற்குமதிகமான கூலிப்படையினர், கெலிகப்டர்கள் ஆகாயப்பாதுகாப்புக் கொடுக்க நடந்து வந்தனர். இவர்களை, எமது வீரர்கள் புதுக்குடியிருப்பு எனுமிடத்தில் இடைமறித்துத் தாக்கினார்கள். இத்தாக்குதலில் இராணுவத்தினருக்குத் தலைமைதாங்கியவர் உட்பட மூன்று இராணுவத்தினர் படுமோசமாகக் காயமடைந்தனர். கெலிகப்டரொன்று மிகவும் பலமாகச் சேதமாக்கப்பட்டது இதனால் கலக்கமடைந்த இராணுவத்தினர் தமது முகாமிற்குள் ஓடிவிட்டார்கள். இதனைத் தொடர்ந்து சிங்கள இராணுவம் புலிகளுக்குச் சமாதானத்தூதுவிட்டுள்ளது தாங்கள் இந்தப்பகுதிக்குப் புதியவர்கள் என்றும், தங்களுக்கும் குழந்தைகள், குட்டிகள் இருப்பதாகவும் தங்களை ஒன்றும் செய்ய வேண்டாமென்றும் கெஞ்சி மன்றாடிச் சில பொதுமக்கள் மூலம் புலிகளுக்குச் சமாதானத் தூதை விட்டனர். தங்கள் நிலைமையைப் புலிகளிற்கு விளக்கிக் கூறும்படி அவர்கள் அப்பொதுமக்களைக் கேட்டுள்ளார்கள்.

முருங்கன் முகாமிலிருந்து இரவு வேளை புறப்பட்ட இராணுவத்தினர் உயிலங்குளம் சந்தியில் மறைந்து நின்று, அவ்வழியில் போவோர், வருவோர்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இவர்களுக்கு உதவியாக 3 வாகனங்களில் இராணுவத்தினர் வந்து சேர்ந்தனர். தகவலறிந்த புலிகளின் கெரில்லாப் பிரிவு சடுதியில் விரைந்து சென்று, இராணுவத்தினர் மீது றொக்கற் தாக்குதலை நடாத்தியது இதனால் பீதியடைந்த இராணுவத்தினர், தமது முகாமிற்குள் சென்று பதுங்கிக் கொண்டார்கள்.

## 20-06-86

கிளிநொச்சி மாவட்டத்தில் வியட்னாம் பாணியிலான தாக்குதலைச் சிங்களப் பேரினவாத அரசு மேற்கொண்டு வருகின்றது. ஏற்கெனவே கிளிநொச்சி மாவட்டத்தில் விமானத் தாக்குதல்களை நடாத்திய இராணுவத்தினர் பொதுமக்களின் இருப்பிடங்களை நாசமாக்கியுள்ளார்கள். இதே பாணியில் 20-06-86 அன்று பகல் 10 மணியளவில் முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் கரடிப்போக்கு கிராமத்திற்குள் புகமுற்பட்டனர் ஆகாயப் பாதுகாப்பாகக் குண்டுவீச்சு விமானங்களும், கெலிகப்டர்களும் பாதுகாப்புக்கொடுக்க ஆங்காரத்துடன் புறப்பட்ட. இராணுவத்தினர் மீது புலிகள் அதிரடித் தாக்குதலைத் தொடுத்தனர். பலமணி நேரம் இடம் பெற்ற சண்டையையடுத்து உயிரிழப்புகளின் மத்தியில் இராணுவம் முகாமிற்குள் பின்வாங்கியது.

## 21-06-86

விமானத் தாக்குதல்களை நடாத்தித் தமிழ் மக்களைப் பீதியடையச் செய்து தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை முறியடிப்பது பௌத்த பேரினவாத அரசின் திட்டமாகும். இதற்கான ஆலோசனைகளை இஸ்ரேலிய மொசாட் சிங்கள அரசுக்கு அளித்து வருகின்றது. இவ்விமானத் தாக்குதல்கள் கிளிநொச்சி மாவட்டத்தை மையமாகக் கொண்டே நடைபெற்று வருகின்றது. இன்றும் இரு குண்டு வீச்சு விமானங்கள், கெலிகப்டர்கள் சகிதம் கிளிநொச்சியை முற்றுகையிட்ட சிறிலங்கா விமானப்படை கனகபுரம் எனுமிடத்தில் அழிவு நடவடிக்கைகளில் இறங்கியது. பாகிஸ்தானிய, அமெரிக்க விமான ஓட்டிகளால் செலுத்தப்படும் சிறிலங்கா விமானப்படை தமிழ் மக்களுக்கெதிரான அழிவு நடவடிக்கைகளில் முதலிடம் வகிக்கின்றது. புலிகள் தமது கரைக விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளைப் பயன்படுத்திக் கடுமையான தாக்குதலில் இறங்கினார்கள். இதனால் விமானப்படை விமானங்கள் உயரே பறந்து மறைந்து விட்டன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1 விடியலுக்கு முந்திய மரணங்கள்

மனித முகங்களே காணமுடியாத காடு, காட்டை ஊடறுத்துச் செல்லும் ஆற்றின் இரு கரையும் செழித்திருந்த மரங்கள் எம்மை வரவேற்கின்றன. காட்டிலிருக்கும் ஒவ்வொரு பூவும் எம்முடன் பேசுகின்றன. அங்கே வீசும் தென்றல்; அங்கு பாடித்திரியும் பறவைகள்; ஓயாமல் ரீங்காரமிடும் வண்டுகள் இவைதான் எமது சொந்தங்கள். இந்த வகையில்தான் அந்தக் காடு ஒவ்வொரு கெரில்லாவாலும் நேசிக்கப்படும் தாயாகி விட்டாள்.

அன்றும் வழமை போல் காட்டில் குளிர்மை இருந்தது; எமது வீரர்கள் அணிவகுத்து நின்றனர். இராணுவ முகாமை அண்மிக்கப் பல மைல்கள் செல்ல வேண்டியிருந்தது. எல்லோரும் டிராக்டரில் ஏறினர். டிராக்டர்கள் இரைச்சலை எழுப்பிக்கொண்டு காட்டுப் பாதைகளூடாக வேகமாக ஓடுகின்றன. பாதைகள் சீரில்லை; பெரிய மரவேர்கள் பாதைக்குக் குறுக்கே கிடந்தன. குன்றுகளும் குழிகளும் பார்க்கின்ற இடமெல்லாம் தெரிகின்றன.

''தடாம்'' ''தொம்'' என்ற சத்தம் பலமாகக் கேட்டுக்கொண்டிருக்கின்றது. சேறும் சகதியுமான பாதை. சேற்றினுள் சில்லுகள் புதைந்து சேற்றை அள்ளி வீசுகின்றன. டிராக்டர்களில் இருந்த தோழர்களின் ஆடைகளில் சேறு படிந்தது;

''மாமா என்ன சேறடிக்குது?''என்றான் சைமன். ''ம்(ஆம்) அம்மான் அது அப்படித்தான்'' என்றான் மாமா. பெட்டிக்குள் இருந்து சிரித்துக் கொண்டு சைமன் ''மாமா பகிடி விடாமல் வடிவா (கேலி பண்ணாமல் ஒழுங்கா) ஓட்டு இல்லையேல் கல்லுகள் தான் வரும்'' என்றான்.

''அதையும் பார்ப்போம் என்பதுபோல் மேலும் வேகமாக ஓட்டுகிறான்.

''இரண்டுபேரும் சண்டையிட்டுக் கொண்டால் நமக்கென்ன........

போராடிக்காம போகும்'' என்றான் பழசு.

டிராக்டர்கள் வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. வேதாவின் டிராக்டர் சேற்றில் புதைந்து விட்டது. எந்தப் புதைவிலிருந்தும் டிராக்டரை எடுத்துவிடும் திறமை அவனிடமிருந்தது. எல்லோரும் உதவி புரிந்தும் முடியவில்லை; சிறிய இருத்தல் படிக்கல்லை (எடைக்கல்லை) எடுத்து வந்தான் வேதா.

''உம் நிறுக்கப் போகிறான் பாருங்க''என்றான் சைமன் ''சும்மா போடாப்பா சைமன்'' என்றவன் ஒருமுன் சில்லை நிலத்தில் முட்டாதவாறு படிக்கல்லைக் கொடுத்துவிட்டு ஒரு இழுவைதான் மூசிக்கொண்டு. டிராக்டர் வந்து விடுகின்றது. வேதா இலேசாக ஒரு சிரிப்புச் சிரித்தான்.

டிராக்டர் ஓட்டுவதில் மாமாவிடம் ஒரு தனி இயல்புண்டு. ஒரு பக்கம் உயரம். மற்றக்கரை சரியான பள்ளம். ஓடி வரும் போதுதான் தென்படுகின்றது. புரளப் போகிறோம் என்று எல்லோரும் ஒரு கணம் நினைத்தோம். வெட்டித் திருப்பி பிறேக்கை அழுத்தினான் மாமா. சிறு மரச்செடிகளை முறித்து நின்றதும் திரும்பி ஒரு பார்வை; தான் டிரக்டரைப் புரளவிடாமல் எடுத்திட்டேன் என்ற புழுகு.

''எப்படி அம்மான் ஓட்டம்''? என்றான் மாமா....

'' நல்லாயிருக்கு ஃபீல்டை (தாக்குதலை) இதிலேயே முடிச்சிடப்பாத்திற்ற'' என்றான் கெனடி.

''கிழடு நீ சும்மாயிரு'' என்றான் வேதா;-

இருவரும் சண்டையிட்டுக் கொள்கின்றனர்·

டிராக்டர்கள் மீண்டும் ஓடத் தொடங்குகின்றன.


இருபக்கமும் நின்றிருந்த மரக்கிளைகளை உரசின. முட்கள் உடலைக் கீறின. பள்ளம் ஒன்றில் சில்லுகள் விழுந்து பெட்டிக்குள் இருந்தவர்களைத் தூக்கிக் குத்தியது. குலுக்கியதிலிருந்து மீழ்வதற்கு முன் அடுத்த பள்ளம். மாறி மாறி உடலை நோகப் படுத்தியது. எனினும் இப்பாதைகளூடாக இலட்சிய முனைப்போடுதான் இயங்கினோம்.

நெஞ்சில் நிறைந்திருந்த மண்ணின் நினைவுகள் நீண்ட பயணத் தொடரின் வேதனையை அப்போது உறுத்தவில்லை. காட்டுப்பாதையூடாக ஓடிக்கொண்டிருந்த டிராக்டர்கள் ஆற்றைக் கடக்க வேண்டியிருந்தது. ஆற்றுக்குள்ளே புதையலாம்; இறங்கி நடந்தால் தனியே டிராக்டரை எடுக்கலாம். என்று பேசிக் கொள்கின்றனர். மாலை நான்கு



**ரஞ்சன் (சைமன்)**

மலர்வு-16-01-61
உதிர்வு-15-2-85



**துவாரகன் (மயூரன்)**

மலர்வு 02-02-67
உதிர்வு-15-02-85

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மணிக்கு ஆரம்பமான பிரயாணம் இன்னும் முடியவில்லை ''இரவு நேரத்தில் அதுவும் குளிரில் தண்ணிக்குள் இறங்கி நடக்கிறதெண்டால்''........... என இழுத்தான் கௌடி. எல்லோரும் டிராக்டர்களில் இருந்து இறங்கி ஆற்றினுள் இறங்கினர்.

காதுகள் ஊடாகக் காற்று ஜில் என்று குளிர்ந்தது. முழங்காலுக்குச் சற்றுமேலே மடித்துவிடப்பட்ட பச்சைநிற உருமறைப்பு ஆடைகள், ஒன்ருகச் சேர்த்துக்கட்டிய சப்பாத்துக்கள் (காலணிகள்) இரண்டும் ஒரு கையில்; ஒவ்வொருவர் தோள்களிலும் பைகள்; மறுகையில் ஆயுதங்கள் இந்நிலையில் சேற்றினுள் புதைகின்ற கால்களை இழுத்து இழுத்துத் தூக்கி நடந்து கொண்டிருக்கின்றனர். தண்ணீர் மட்டம். இடுப்பளவையும் தாண்டி வயிற்றையும் நனைத்தது சிலர் தடுமாறி விழுந்து விடச் சரிந்தபோது மற்ற நண்பர்கள் அவர்களை அணைத்து நிலைப்படுத்திக் கொண்டு ஆற்றைக் கடந்து விடுகின்றனர். நீளமான உருமறைப்பு ஆடைகளில் இருந்து நீர் சிந்திக் கொண்டிருந்தது. இரண்டு டிராக்டர்கள் தோழர்களை மறுகரையில் ஏற்றத் தயாராக நின்று கொண்டிருந்தன.

வேதா தோழர்களைத் திரும்பிப் பார்க்கிருன்.

என்னம்மான் வேதா! இறங்க வேணுமோடா? எனத் தோழர்கள் வேதாவைக் கேட்கின்றனர். அதற்கு அவன் இல்லையம்மான் இருங்கோ என்ருன். டிராக்டர் ஆற்றினுள் இறங்கியது. பெரிய சில்லுகள் நீரை அள்ளித் தோழர்கள் மீது வீசுகின்றன. பெட்டிக்குள் இருந்தவர்கள் நனைகின்றனர். குளிரையும் ஊடறுத்து டிராக்டர் உருண்டு கொண்டிருக்கின்றது. மாமாவின் டிராக்டரும் பின்னே வந்து கொண்டிருக்கின்றது. லையிற் வெளிச்சம் நீரில் பட்டு மரங்களில் தெறித்திருந்தது. காத்தானின் டிராக்டரும் ஆற்றில் இறங்கத் தயாராக வந்து நிற்கின்றது. ஒளி வெள்ளத்தில் அந்தப் பகுதி மிதந்தது.

வேதாவும் மாமாவும் அதிசிறந்த வாகனச்சாரதிகள். இவர்கள் வாகனம் ஓட்டும்போது தனி விமர்சனம் எழும். ஒட்டிசுட்டான் போலிஸ் நிலையத் தாக்குதலை முடித்துவிட்டு ஓட்டிய ஓட்டம் தான் நினைவில் வரும். இவர்களால் பயிற்றப்பட்ட சாரதிகள் எத்தனை பேர்......! ''டிராக்டர் புதைந்துவிட்டது'' என்று காத்தானின் செய்தியை வேதாவின் வோக்கி ரோக்கி அலறியது. வேதா ஆற்றுள் இறங்கிச் செல்கிருன். டிராக்டர் கரை வந்து சேர்கிறது. ஆபத்தானதும் துயரம் மிக்கதுமான பாதைகள் ஊடாகப் பிரயாணம் தொடர்கிறது. எல்லோரிடமும் மௌனம் சூழ்ந்திருக்கின்றது. யாருக்கும் பேச்சு வரவில்லை சீரியஸாகி இருக்கின்றனர்.

நீரால் நனைந்த உடைகளைப் பிழிந்து உதறிக்கொண்டு சைமனும் ஜெகனும் ஏதோ பேசிப் பலமாகச் சிரித்துக் கொள்வது கேட்கின்றது. அந்தச் சிரிப்பு எல்லோரது மௌனத்தையும் குதறிக்கொண்டெழுந்தது. ''கலரும் மாறிப் போச்சு'' என்று ஜெகன் கௌடியோடு கேலி பண்ணியதால்தான்) அந்தச் சிரிப்பு. அவனின் அந்தக் குறும்புத்தனம் எல்லோரையும் சிரிக்க வைத்துவிடும். தோழர்கள் மீது பயங்கரமாக அன்பைச் செலுத்தும் அவன் தோழர்கள் அந்த இருளில் நனைந்து பேசாமல் நிற்பதால் அவ்வாறு சொல்லியிருக்க வேண்டும்.

ஒரு நாள் பலத்த மழை பெய்தது. எமது கூடாரங்கள் ஊடாக நீரடித்து ஓடிக்கொண்டிருந்தது. சடுதியாக ஏற்பாடு செய்திருந்த அமைவிடம். அவ்வளவு நன்ருக இருக்கவில்லை. இதனால் மரங்களுக்குக் கீழே ஒதுங்கிக் கொண்டும் பரண்களில் ஏறி முகங்களை முழங்காலில் வைத்துக் கொண்டும் நடுங்கியவாறும் இருந்த தோழர்களை நோட்டமிட்டவாறு அவன் நின்றுகொண்டிருக்கிருன். மதிய உணவுத்தயாரிப்பில் ஈடுபடமுடியாதவாறு அடுப்பில் நீர் நிறைந்து கிடக்கின்றது. விறகுகளும் நனைந்து விட்டன. தேநீர்கூட அருந்த முடியாது. பசிக்களை ஒருபுறம். சனியன் பிடிச்ச மழை இந்த நேரத்திலையா பெய்யவேணும்' என நினைத்துக்கொண்டு தோழர்கள் பேசாதிருந்தனர். அந்த நேரத்தில் ஏதாவது கதை சொல்வான் ஜெகன். ஜெகன் கதை சொல்கிறான் என்றாலே ஒரே சிரிப்புத்தான். துயரம் சூழ்ந்த நாட்களில் இருந்து மீட்டு எழுந்து சந்தோஷங்களை ஊட்டும் திறன் அவனுக்குரியதே...

## 2

காட்டுப்பாதையூடாக மரங்களையும், செடி கொடிகளையும் விலக்கிக்கொண்டு டிராக்டர் ஓடிக்கொண்டிருக்கிறது. இருண்ட காடு. சாமம் ஆகிவிட்டிருந்தது. பற்றைகளை முறித்துச் சலசல......என்று சத்தம் கேட்டது. சத்தம் வந்த திசையை நோக்கி M16 தானியங்கித் துப்பாக்கியைச் சடுதியா[illegible] தயார் நிலைக்கு மயூரன் எடுத்திருந்தான். மயூரனை வேதா அழைத்தான். ''அவதானமாகப் பார்'' என மயூரனிடம் பணிக்கிறான். மயூரன் சிறந்த பார்வை சக்தியுள்ளவன். ''முள்ளம்பன்றிகள் ஓடுகின்றன'' என்று கூறிவிட்டு தனபாலோடு பேசிக்கொண்டிருக்கிறான்.

மயூரன் சிறந்த போர்ப்பயிற்சி எடுத்திருந்தான். மனதை ஒரு நிலைப்படுத்திக்குறியைச் சாய்ப்பதில் அவனிடமிருந்த திறமை எம்மை வியக்கவே செய்யும். அந்தச் சிறுவயதில் அப்படிப்பட்ட பயிற்சியை யாரும் பெறுவதே இயலாது. மாலை நேரங்களில் பயிற்சிக்காகக் கொடுக்கப்பட்டிருந்த AIR GUN துப்பாக்கியை அவன் தூக்கிக்கொண்டு திரியும் அழகே அழகு!

பறந்துகொண்டிருக்கும் காக்கை குருவிகளை இலக்கு வைப்பதில்தான் அவனுக்குப் பிரியம். ஒரு முறை காகம் ஒன்று பறந்து கொண்டிருந்தது. அதன் இறக்கைகளை அகல விரித்து விமானம் இறங்குவது போல் இலக்கை நோக்கிப் பறந்துகொள்வதும் திடீரென மேலெழுவதுமாக இருந்தது. இந்த நேரத்தில் அவனது இலக்கு விரைவாக வைக்கப்படுகிறது. காகம் மணலில் இறக்கை விரித்துத் துடித்துக்கொண்டு கீழே விழுந்தது. இவ்வாறு பயிற்சி முகாமிலே அவனிடம் காணப்பட்ட திறமைகள் சொல்லிலடங்காது. களங்கள் அவனது திறமையைப் பன்மடங்கு வளர்த்தது.

சமையல் வேலைகளாயினும் சரி எந்த வேலைகளையும் திறம்படச் செய்து முடிப்பான். துடியாட்டம் மிக்க அவனது தோற்றமும் தெளிந்த சிரிப்பும் நெஞ்சில் இன்றும் திரையிடுகின்றன.

மயூரன் வயதில் இளையவனாக இருப்பதால் அவனை எல்லோருமே தம்பி என்றே அழைப்பர்.

பட்சிகளின், கீதங்களும் யானைகளின் பிளிறல்களும், நரியின் ஊளைச் சத்தங்கள் போன்றனவும் கானகத்தின் இன்னிசை நிகழ்வுகள். காத்தானின் டிராக்டர் வெளிச்சம் மரங்களைத் தழுவிச் சென்று கொண்டிருக்கிறது.

நடுக்காடு.

(தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# செய்திக்கதிர்

## இரக்கமற்ற இராணுவத்தின் அரக்கச் செயல்- ஊனமுற்ற பெண் கற்பழிப்பு ! உப்புவெளியில் பச்சைக் குழந்தையுட்பட பத்துப்பேர் சாகடிப்பு !

திருமலை மாவட்டத்தின் உப்பு வெளியில் 2. 6. 86 அன்று சிறீசாந்தகுமாரி (26) என்ற போலியோவினால் பாதிக்கப்பட்டு வலது கால் ஊனமுற்றிருந்த பெண்ணைச் சிங்கள வெறியர்கள் கதறக்கதறக் கற்பழித்துக் கொன்றனர். அதைத் தொடர்ந்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மொத்தம் 10 பேர் சாகடிக்கப்பட்டனர். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கனகரத்தினம், அவர் மனைவி நவமலர் (28) மகள் சாலினி (6) ஆகியோரும் அடங்குவர். பிரேத பரிசோதனையின்போது நவமலர் கனகரத்தினமும் கற்பழிக்கப்பட்ட பின்னரே கொல்லப்பட்டது தெரியவந்துள்ளது. இச்சம்பவத்தைப் பற்றி மரண விசாரணை மேற்கொள்ளப்பட்ட போது அச்சத்தின் காரணமாக யாரும் சாட்சியளிக்க முன் வரவில்லையென்றும், மேற்கொண்டு விசாரணையைப் போலீசாரை தொடருமாறு அந்த அதிகாரி உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிகிறது. இது வேலிக்கு ஓணான் சாட்சிபோல் காணத் தெரிகிறது.

## "தன் கையே தனக்கெதிரி" குண்டு வெடித்துச் சிங்களச் சிப்பாய் சாவு !

திரிகோணமலை சேருநுவர என்னுமிடத்தில் பீ. ஜீ. ஜே. பண்டார எனும் சிப்பாய் காவல் பணியில் ஈடுபட்டிருந்தார். அதுசமயம் கெலிகாப்டர் ஒன்று தரையிறங்கிய வேளையில் அப்பகுதி சுற்றுவட்டாரத்தைப் பாதுகாப்புக் கருதிப் பார்வையிட்டு வந்தபோது தனக்குப் பாதுகாப்பாகக் கையில் தயார் நிலையில் வைத்திருந்த 'கிரனைட்' எனும் கைக்குண்டு தவறி விழுந்து வெடித்ததால் அந்த இடத்திலேயே பிணமானார். இச்சம்பவம் மேமாதம் கடைசி வெள்ளியன்று இடம்பெற்றது.

## தமிழ் போராளிகளின் விவேகம், ஆயுத பலமுடன் கூடிய சிறந்த கட்டுப்பாடு! வடபகுதியை தளமாகக் கொள்ளும் வகையிலான வளர்ச்சி, இலங்கை அரசின் திறமையின்மை- பாதுகாப்பற்ற இராணுவ முகாம்கள்! அமெரிக்க இராணுவ நிபுணரின் படப்பிடிப்பு !

இலங்கையில் யாழ்மாவட்டத்தில் சிங்கள இராணுவத்தினருடன் பல நாட்கள் தங்கியிருந்து தமிழ் ஈழத்தில் புலிகளின் பலத்தையும், இலங்கை அரசின் கையாலாகாத்தனத்தையும் நேரில் கண்டு அமெரிக்கா திரும்பிய இராணுவ நிபுணர் ரொம் மார்க்ஸ் அவர்களின் பத்திரிகைப் பேட்டியொன்றினை தமிழ் இனத்துரோகிகள் மற்றும் எதிரிகளின் காமாலைக் கண்களுக்கு அறியத் தருகின்றோம். திரு. ரொம்மார்க்ஸ் ஹவாய் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒரு முன்னாள் அமெரிக்கப் புலனாய்வுத்துறை நிபுணராவர். கிளர்ச்சிப் போர் முறைகளில் நிபுணத்துவம் பெற்றவர். இவரது பரபரப்பான இலங்கைக் கண்ணோட்டம் பற்றிய கட்டுரை 'வோல்ஸ்ட்ரீட் ஜெர்னல்' (Wall Street Journal) பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

## நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், அறிவிப்பாளர்கள் வெளியேற்றம் ! ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகுமா ?

இலங்கையரசின் கட்டுப்பாட்டிலுள்ள 'ரூபவாஹினி' - தொலைக்காட்சியகத்தில் பணிபுரிந்து வந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள், அறிவிப்பாளர்கள், தொழில்நுட்பப்பணியாளர்கள் ஆகியோர் தமிழர்கள் என்கின்ற காரணத்தை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கையாகக் கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டு விட்டனர். இதனால் இனித் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகுமா என்ற அச்சம் தமிழ் மக்களிடம் காணப்படுகின்றது. தற்போது தமிழ் நிகழ்ச்சிகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை இராணுவத்தினரின் "கைகொட்டிச்சிரிக்கும்" கட்டுப்பாடு விமானப்படை வீரர் கொலை- கடற்படையினர் கைது !

இலங்கையின் சீனன் குடா விமானப்படை வீரர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டது தொடர்பாக அதே இடத்தில் உள்ள இரண்டு கடற்படை வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆண்டான் குளம் எனும் இடத்தில் இடம்பெற்ற இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இறந்தவர் ஜீ. டி. ஜெயந்தகுலதுங்க என்பவராவார். இது தொடர்பாகக் கைதானோர் ஆர். டி. விமலசேன, கே. எல். எப். பெரேரா என்ற இரு கடற்படையினராவர். மரண விசாரணை நடத்திய நீதிபதி இரு நபர்களையும் காவலில் வைக்க உத்தரவிட்டார்.

## தமிழர்களுக்குள் மதச் சண்டையை மூட்டிவிடும் சிங்கள வெறியரின் முயற்சி முறியடிப்பு!

அக்கரைப்பற்றுப் பகுதியானது இஸ்லாமிய மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியாகும். இப்பகுதியில் தமிழ் மக்களுக்குள் மதச் சண்டையை உருவாக்கி பிளவேற்படுத்தும் வகையில் "எமது பகுதியில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை தமிழர்கள் நடமாடக்கூடாது" என்பனபோன்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகளைச் சிங்கள வெறியர்கள் திட்டமிட்டு ஒட்டியிருந்தனர். இதைக் கண்ணுற்ற இஸ்லாமியத் தமிழ்ப் பிரமுகர்கள் சீற்றமடைந்து மேற்படி சுவரொட்டிகளைக் கிழித்தெறிந்தனர். இதனால் தமிழர் - முஸ்லீம் என்ற பேதத்தை உருவாக்க நடந்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## "அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" - கொழும்பு நகரில் பைகளில் புத்தகம் எடுத்துச் செல்லத் தடை !

கொழும்பு நகரில் கடந்தவாரம் ரோயல் கல்லூரியில் வெடிகுண்டு வைக்கப்படப் போவதாகக் கிளம்பிய புரளியின் காரணமாக மாணவர்கள் தங்கள் பைகளில் புத்தகங்கள் எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டது. சிறிய வகுப்பு மாணவர்கள் மட்டும் 'ஷாப்இங்பேக்குகளில்' (சிறியபை) புத்தகம் கொண்டு செல்லலாம். பெரிய வகுப்பு மாணவர்கள் தங்கள் பைகளில் வெடிகுண்டுகளை மறைத்தெடுத்துச் செல்லலாம் என அச்சமுற்ற அரசினரின் இந்நடவடிக்கையால், வெறும் கைகளில் புத்தகங்களைச் சுமந்தபடி பேருந்துகளில் செல்லும் மாணவர்கள் மிகுந்த சிரமமடைகிறார்கள்.

## தமிழீழ மக்கள் உயிர்காக்க இரத்ததானம் ! இளைஞர்கள் போட்டிபோட்டு முன்வருகின்றனர் !

யாழ்ப்பாண மருத்துவமனையில் அண்மையில் இரத்தவங்கியின் கையிருப்பு எட்டுப் பைந்தாக இருந்தது. இந்நிலையை அறிந்த யாழ் இந்துக் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்களும் தாராளமாக முன்வந்து இரத்தமளித்தனர். இதனால் தற்போது இரத்தக் கையிருப்பு அதிகரித்துள்ளது. இரத்த வங்கியில் எப்போதும் நூறு பைந்து இரத்தம் கையிருப்பில் இருக்கவேண்டும். தினசரி சாதாரண நிலையில் 10 முதல் 15 பைந்துகள் வரை இரத்தம் பயன்படுத்தப்படுகிறது. தற்போதுள்ள சூழலில் இந்த அளவு அதிகரித்திருக்கிறது. (8 பைந்து = 4½லீட்டர்).

## தமிழர்களா? சிங்களவர்களா? அகதிகள் நிவாரண உதவியில்கூட இனவாதம்-தமிழ் மக்கள் புறக்கணிப்பு!

திருகோணமலை மாவட்டத்து கந்தளாய் குளத்தின் அணைக்கட்டு சமீபத்தில் உடைப்பெடுத்ததன் காரணமாகக் கோயில் கிராமப்பகுதியில் பெரும் பாதிப்பிற்குள்ளான தமிழ் மக்களுக்குத் தரப்படும் அகதிகள் நிவாரண உதவியானது போதுமானதாக இல்லை. இவர்களுக்கு இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை அரசின் சிபார்சு செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன. ஆனால் இதே விபத்தில் பாதிக்கப்பட்டுள்ள சிங்களர்களுக்கு வேண்டிய உணவுப் பொருட்களும், வேறு உதவிகளும் தாராளமாக வழங்கப்படுகின்றன. இதன் மூலம் தனது மனிதாபிமானமற்ற இனவாதப் போக்கை மீண்டும் ஒருமுறை சிங்கள அரசு உலகுக்கு வெளிச்சம் போட்டு புலிகளினால் காட்டுகின்றது.

## கிளிநொச்சி 'கரடிப்போக்கு' மதகு புலிகளினால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது! வடபகுதி போக்குவரத்துக்கள் பாதிப்பு!

கிளிநொச்சியில் அமைந்துள்ள கரடிப்போக்கு மதகினை 15-6-86 இரவு புலிகள் குண்டு வைத்துத் தகர்த்துவிட்டனர். இதன் காரணமாக வடபகுதிக்கான போக்குவரத்துக்கள் மிகவும் சிரமத்திற்கிடையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இம்மதகின் இடிபாடுகளையகற்றிச் செப்பனிடும் வேலையில் நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களுடன் இராணுவமும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இதற்கிடையில் கிளிநொச்சியில் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளதன் காரணமாகக் கடைகள் திறக்கப்பட்டிருந்தன மக்கள் நடமாட்டம் சிறிது காணப்பட்டது. அசம்பாவிதங்கள் ஏதேனும் நடப்பதற்கான அய்யமேற்படின் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தக் கிளிநொச்சி இணைப்பதிகாரிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் மாணவர்கள் வருகை குறைவாகக் காணப்படுகின்றது.

## பலாலி-வல்வெட்டித்துறை நெடுஞ்சாலையில் புலிகளின் வீதித்தடைகள்! "அகற்றியே தீருவோம்" வெளிநாட்டு நிருபர்களிடம் இராணுவ அதிகாரி வாய்ச்சவடால்!

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நடந்த கடுமையான யுத்தத்திற்குப் பின் வெளிநாட்டு நிருபர்கள் (பி. பி. சி., ராய்ட்டர்) யாழ் மாவட்டத்தைப் பார்வையிட 6 வாரங்களுக்குப் பின் முதன்முதலாக அனுமதிக்கப்பட்டனர். வல்வெட்டித்துறை இராணுவ நடவடிக்கையின்போது கெரில்லாக்களின் தாக்குதல் மிகக் கடுமையாக இருந்ததையும் இரு ஹெலிகாப்டர்களும், கடற்படைப் படகுகளும் சேதப்படுத்தப்பட்டதையும் உயர் இராணுவ அதிகாரி நிருபர்களிடம் ஒப்புக்கொண்டார். இதன் காரணமாகவே பலாலி - வல்வை நெடுஞ்சாலையில் புலிகளால் அமைக்கப்பட்டுள்ள வீதித்தடைகளை அகற்றுவது தாமதமாகிவிட்டது என்றும் அத்தடைகளையகற்றும் இறுதிக்கட்டப் பணிகள் இவ்வார இறுதியில் துவங்கும் என்றும் சொல்லிக்கொண்டார். புலிகள் ஏற்படுத்தியுள்ள வீதித்தடைகள் காரணமாக இராணுவ முகாமிலிருந்து வீரர்கள் வெளிக்கிளம்பிச் செல்ல முடியாத நிலையுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் இராணுவத்தினரின் பாதுகாப்பு நடவடிக்கை தீவிரம்! எந்நேரத்திலும் புலிகள் தாக்கலாம் என்ற அச்சம்

வவுனியாவிலும், அதைச் சார்ந்த சுற்றுப்புறப் பகுதிகளிலும் இராணுவத்தினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தச்சன் குளம் இராணுவ முகாமின் விமான ஓடுபாதைப் பகுதிகள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. கடைவீதிகளில் வாகனங்களிலும், கால் நடையாகவும் இராணுவத்தினர் ரோந்து புரிகின்றனர். விடுதலைப் புலிகள் எந்த நேரத்திலும் தாக்குதல் தொடுப்பர் என எதிர்பார்த்து இந்நடவடிக்கைகள் பரபரப்பாக மேற்கொள்ளப்பட்டன. யாழ் மாவட்டத்திலுள்ள போக்குவரத்துகளும், தொலைபேசி இணைப்பும்கூடத் துண்டிக்கப்பட்டுள்ளது. நவீனரக விமானங்களும் சுற்றி வந்தபடி இருந்தன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழத்தில் அரச பயங்கரவாதம்

சிங்கள அரச பயங்கரவாதிகளின் காட்டு மிராண்டித்தனம், மனித நாகரிகத்திற்கப்பாற்பட்ட எல்லையைக் கடந்துவிட்டது. தொடர்ந்து இனவாத அரசால் அப்பாவித் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட இனப்படுகொலை கட்டவிழ்த்துவிடப் பட்டுள்ளது. கடந்த ஜுன் மாதம் தமிழீழத்தின் கிழக்குப் பகுதி பெரும் அழிவைச் சந்தித்துள்ளது. இங்கு அரச முப்படைகளுடன், சிங்களக் காடையர்களும் சேர்ந்து கொண்டு பெரும் அழிவை விளை வித்து வருகின்றார்கள். அத்துடன் வடக்குக் கடற் பகுதியில் சிறிலங்கா கடற்படை கோரதாண்டவ மாடியுள்ளது. அப்பாவி மீனவர்களும், அகதி களுமான பல தமிழர்கள் துவேசம் பிடித்த கடற் படையினரால் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டுள்ள னர். இப்படுகொலைகள் தமிழ் மக்களின் எழுச்சியை எந்த வடிவத்திலும் அடக்கமாட்டாது. மாறாக விடுதலைப் போராட்டத்தின் உறுதி அதிகரித்து, அதன் உக்கிரம் அதிகரிக்கும் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

## 1-6-86

யாழ்நகரின் மீது சிறிலங்கா அரசின் விமானப் படை கெலிகப்டர் கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டது. அத்துடன் கோட்டை முகாமி லிருந்தும் மோட்டார், பீரங்கித் தாக்குதல்கள் இடம் பெற்றன. இனவாத அரசினால் மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்கள் யாழ்நகரின் மையப் பகுதியைச் சிதைக்கும் நோக்கம் கொண்டவை யாகும். இச்சம்பவத்தில் இரு சிறுவர்கள் உட்பட 4 பொதுமக்கள் பலியானார்கள். 30 பேர் காய மடைந்து யாழ் பொது மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டனர். 8 கடைகளும், 4 வீடுகளும் முற்றுகச் சேதமடைந்தன.

திருகோணமலை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சிங்களக் காடையர்கள் தமிழ் மக்களைக் கொன்றுகுவித்துள்ளார்கள். பள்ளிக் குடியிருப்பு எனுமிடத்தில் 6 தமிழர்களைச் சிறைப் பிடித்த சிங்கள ராணுவம், அவர்களை ஓடுமாறு பணித்து, அந்த அப்பாவிகள் ஓடும்போது இராணுவத்தினர் சரமாரியாகச் சுட்டதில் மூவர் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர். கந்தளாயில் 6 தமிழர்களைப் பிடித்த இராணு வத்தினர் அவர்களைக் கண்டபடி வெட்டிக் கொலை செய்தனர். மூதூரில் 3 தமிழ் மக்களை இராணுவம் வெட்டிக் கொன்றது. திருமலையிலுள்ள 3ம் கட்டை எனுமிடத்தில் இரு பெண்கள் உட்பட 9 பேரைச் சிங்கள இராணுவம் காட்டிற்குள் அழைத்துச் சென்று அவர்களைக் கொலை செய்தது. அப்பெண்களை மிருகத்தன மாகக் கற்பழித்த பின்னரே அவர்களைக் கொலை செய்தார்கள்.

## 4-6-86

கிளிநொச்சி முகாமிலிருந்து இராணுவத்தினர் கண்டபடி மோட்டார், பீரங்கி தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனுல் பொதுமக்களிற்குப் பெரும் சேதம் விளைந்தது. பல வீடுகள் சேதமா யின. அனந்தபுரத்தில் செல்லொன்று வீடொன்றி னுள் விழுந்து வெடித்ததில் தாயின் அரவணைப் பிலிருந்த ஐந்து பாலகர்கள் பலியானார்கள். அத் தாயும் அவ் வீட்டிலிருந்த வேறு சில பெரியவர் களும் படுகாயமடைந்தனர்.

பலியான பாலகர்களின் விபரம் வருமாறு :-
1. கிருபாளினி (1 வயது), 2. பவானி (4 வயது), 3. புஸ்பராசா (5 வயது), 4. செந்தில் குமார் (8 வயது), 5. கலாதரன் (10 வயது)
மேலும் முறிகண்டி என்னுமிடத்தில் ஹெலிகப்டர் கண்டபடி சுட்டதில் பொதுமகனொருவர் கொல்லப் பட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இருதயபுரம் என்னுமிடத்தில் சிங்களப் போலீஸ் கொமாண் டோக்கள் 30 தமிழர்களைக் கைது செய்தனர். அதில் மூன்று பேரைச் சுட்டுக் கொன்றனர். எஞ்சி யவர்களின் கதி என்னவென்று தெரியவில்லை.

வவனியாவில் சிங்கள ஊர்காவல் படையின ரின் அட்டகாசங்கள் அதிகரித்து வருகின்றன. வவுனியா நகரை அழிப்பதற்காகவே சிங்கள அரசு பல சிங்களக் காடையர்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்து அனுப்பியுள்ளது. இவர்கள் 4-6-86 அன்று வவுனியா நகரில் வெறியாட்டம் ஆடினார் கள். தமிழர்களின் கடைகளை உடைத்தும், அவற்றிற்குத் தீ வைத்தும் பெரிய அட்டகாசம் செய்தனர்.

## 5-6-86

கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் சில தினங் களாகச் சிங்கள அரசின் வெறியாட்டத்துக்குள் சிக்கியுள்ளது. முகாமை விட்டுப் புறப்படமுடியாத இராணுவம் முகாமிலிருந்து கண்டபடி மோட்டார், பீரங்கித்தாக்குதல்களை மேற்கொண்டது. இதற்குத் துணையாகச் சிங்கள விமானப்படையினர் குண்டு வீச்சு விமானங்களையும், ஹெலிகப்டர்களையும் பயன்படுத்திக் குண்டுமாரி பொழிந்தனர். 5-6-86 அன்று பரந்தன் சந்தியில் 3 குண்டு வீச்சு விமா னங்களும் இரு ஹெலிகப்டர்களும் மேற்கொண்ட குண்டு மழையில் உணவு முத்திரை லாரியொன்று முற்றாகச் சேதமடைந்தது. அதனுள் இருந்து ரூ 10 இலட்சம் பெறுமதியான உணவு முத்திரைகளும், முக்கிய தஸ்தாவேஜுகளும் எரிந்து சாம்பராகியது. அத்துடன் லாரியின் சாரதியும், நடத்துனரும்

தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரிதாபமாக மரணத்தைத் தழுவினார்கள். இந்த லாரியில் வந்த யாழ் அரசாங்க அதிபர் பஞ்சலிங்கமும் சில அதிகாரிகளும் மயிரிழையில் உயிர் தப்பினார்கள். இத் தாக்குதலில் பாடசாலை ஒன்றின் மீது குண்டு விழுந்ததில் ஆசிரியர்கள் உட்படப் பல மாணவர்களும் காயமடைந்தனர்.

திரிகோணமலை மாவட்டத்திலுள்ள அபயபுரத்தில் அப்பாவித் தமிழ் மகனொருவனை அடித்துக் கொன்ற கூலிப்படையினர் பின்பு அவனது உடலிற்கு நெருப்புவைத்துவிட்டுச் சென்றனர். பாலையூரில் 3 தமிழர்களின் கடைகள் சிங்களக் காடையர்களால் சூறையாடப்பட்டது. இதனைப் பார்த்துக்கொண்டிருந்த தமிழனை வெட்டிக்கொன்றனர். மற்றுமொருவர் காயமடைந்தார்.

பருத்தித்துறைக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஞானதாஸ் (21) எனும் மீனவர் கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி மரணமானார். இவருடன் சென்ற மற்றுமொரு மீனவர் காயமடைந்து, பின் கடலில் குதித்துத் தப்பித்துக்கொண்டார். இவர்கள் மீன் பிடிக்க உபயோகித்த படகு, படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகிச் சல்லடை போடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

## 6-6-86

திருகோணமலை மாவட்டத்தில் அகதிகளாக இருக்கும் தமிழ் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களைக் கொண்டுவந்த இஸ்லாமியத் தமிழர்கள் சிங்கள இனவாத அரசின் கூலிப்படையினரால் கோரமாகத் தாக்கப்பட்டார்கள். இவர்கள் வாகனங்களில் கொண்டுவந்த உணவும் அரசபடையால் பறிக்கப்பட்டது. இவ்வுணவுப் பொருட்கள் யாவும் சிங்கள மக்கள் வாழும் மாகோ எனுமிடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

கிண்ணியாவிலிருந்து திருமலை நோக்கி வந்த பேருந்தை இடைவழியில் மறித்த சிங்களக் காடையர்கள் அதில் பிரயாணம் செய்த இரு தமிழர்களை வெட்டித் துண்டு துண்டாகப் பேருந்தினுள் வீசிவிட்டுத் தமது வழியே சென்றார்கள். இதே போல மட்டக்களப்பிலிருந்து கல்லோயா வந்த புகையிரதத்தில் இடை நடுவில் ஏறிய சிங்களக்காடையர்கள், புகையிரதத்தில் பிரயாணம் செய்த 9 தமிழர்களை வெட்டிக் கொன்றனர். பலாலி முகாமிலிருந்து அடைவு நகைகளை மீட்டு வந்த பொதுமக்கள் வந்த வாகனத்தைக் கெலிகப்டரொன்று சுமார் 1 மைல் தூரம்வரை துரத்தித் துரத்திச் சுட்டது. இச்சம்பவத்தில் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சின்னராஜா (50) என்பவர் மரணமடைந்தார். மேலும் நால்வர் காயமடைந்து யாழ் பொதுமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

## 7-6-86

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள திருநகர், கனகபுரம் எனும் கிராமங்களுக்குள் புகுந்து அரச பயங்கரவாதிகள் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனால் 10 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 25 இற்குமதிக மானோர் காயமடைந்தார்கள். அத்துடன் முகாமிலிருந்து பயங்கரமாகப் பீரங்கித் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதில் கந்தசுவாமி கோவிலொன்று சேதமடைந்தது. கோயிலில் தஞ்சம் புகுந்த வயதான பெண்மணியொருவரும் செல் வெடித்துச் சிதறியதில் காயமடைந்து பின் மரணமானார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள தாண்டியடி எனுமிடத்தில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த நான்கு தமிழர்களைக் கொமாண்டோக்கள் சுட்டுக் கொன்றனர். அன்று சிங்கள அரசின் தொலைக்காட்சி நான்கு பயங்கரவாதிகள் அம்பாறையில் கொல்லப்பட்டதாக அறிவித்தது.

வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற கெலிகப்டர் தாக்குதலில் கர்ப்பிணிப் பெண்ணொருத்தி பலியானாள். இராசபரமேஸ்வரி தேவகாமணி எனும் பெண்ணே கெலிகப்டர் தாக்குதலில் உயிரிழந்தவளாவாள்.

## 8-6-86

கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் பரவலாக சிங்கள விமானப்படை தனது குண்டுவீச்சுத் தாக்குதலை உக்கிரமாக்கியது. பயங்கரமாக இடம்பெற்ற குண்டு வீச்சில் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக வெளிமாவட்டம் நோக்கிச் சென்றனர். பல வீடுகள் சேதமடைந்தன. உருத்திபுரம், வட்டக்கச்சி, முரசுமோட்டை ஆகிய இடங்களில் 25 பேரிற்கு மேற்பட்டோர் குண்டுவீச்சில் பலியானார்கள். திருகோணமலை இந்துக்கல்லூரியில் காவலாளியாக வேலை செய்து வந்த தமிழ் இளைஞனைச் சிங்களக் காடையர்கூட்டம் வெட்டிக் கொன்று வீதியில் போட்டது.

## 9-6-86

யாழ் கோட்டை முகாமிலிருந்த இராணுவம் கண்டபடி சுட்டதில் வயோதிபர் ஒருவர் கொல்லப்பட்டார்.

## 10-6-86

யாழ் மாவட்டத்திலுள்ள வல்வெட்டித்துறை நகரின் மீது சிங்கள அரசு தனது முப்படைகளையும் கட்டவிழ்த்துவிட்டது. முகாமிலிருந்து பீரங்கித் தாக்குதல்களும், பாக்குநீரிணையிலிருந்து கடற்படைத் தாக்குதல்களும், விமானப்படைத் தாக்குதல்களும் தொடர்ந்தன. இதனால் இரு சிறுவர்கள் காயமடைந்தனர். இருபத்தைந்திற்கு மதிகமான வீடுகளும் சேதமடைந்தன.

www.tamilarangam.net



# பேடித்தனமான போர்முறையில்...



பேடித்தனமான போர் முறையைப் பின்பற்றும் இஸ்ரேலிய மொசாட்டின் ஆலோசனையைப் பின்பற்றி 'தர்மிஷ்ட' இலங்கையின் அரசபடைகள் செய்து வரும் அட்டூழியத்திற்கு இங்கு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் சடலங்கள் சமீபத்திய ஒரு சம்பவ சாட்சியாகும்.

ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்வதற்குத் தடை, கரை வலைதொழிலுக்கு சென்ற பத்தாம் தேதி குருநகரைச் சேர்ந்த கடற்றொழிலாளர் சிலர் ஒரு படகில் சென்றனர். குருநகரிலிருந்து சில மைல் தூரத்திலுள்ள மண்டைதீவுக் கடலில் அவர்கள் வலைகளை வீசிக்காத்து நின்றனர். இச்சமயம் பீரங்கிப் படகொன்றில் வந்த கறுப்புச் சட்டையணிந்த இலங்கை இராணுவச் சிப்பாய்கள் கசாப்புக்கடைக்காரன்போல் இந்த மீனவர்களை வெட்டியும் குத்தியும் சித்திரவதை செய்து சுட்டுக் கொன்றுவிட்டுச் சென்றனர்.

12 வயது முதல் 70 வயதுவரையான முப்பது பேரின் சடலங்களே கடலிலிருந்து மீட்கப்பட்டன. காலையில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் மாலையில் பிணமாகக் கொண்டுவரப்பட்டனர். இந்தச் சடலங்கள் குருநகர் சனசமூக நிலைய மண்டபத்தில் அடுக்கி வைக்கப்பட்டன. இக்காட்சியைக் கண்டு கதறியழுதவர்களும் மயங்கி விழுந்தவர்களும் கணக்கிலடங்கா! இக்கோரச் சம்பவத்தையறிந்து குருநகர் மட்டும் அழவில்லை; யாழ்ப்பாணமே அழுதது; சோகத்திலாழ்ந்தது.

இறந்தவர்களின் பூதவுடல்கள் மறுநாள் பதினோராம் தேதி குருநகரிலுள்ள அர்ச் யர்கப்பர் தேவாலயத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோது பல்லாயிரக்கணக்கான மக்கள் தம் இறுதி அஞ்சலியைச் செலுத்தியதோடு பிற்பகலில் இறுதியாத்திரையிலும் நல்லடக்கத்திலும் கலந்து கொண்டனர்.

இக்கோரக்கொலை நடந்து இரண்டு தினங்களின் பின் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒலிபரப்பிய செய்தியறிக்கையில், கடற்படைப் படகைப் பயங்கரவாதிகள் தாக்கியதாகவும் படையினர் திருப்பித் தாக்கியதில் பயங்கரவாதிகள் பலர் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

மண்டைதீவிலுள்ள இராணுவ முகாமுக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு சென்ற கடற்படைப் படகுமீது மார்க்ஸியப் பயங்கரவாதிகள் தாக்கியதாகவும் படையினர் திருப்பித் தாக்கியதில் பயங்கரவாதிகள் பலர் கொல்லப்பட்டதாகவும் அவர்களிடமிருந்து சில ஆயுதங்கள் மீட்கப்பட்டதுடன் ஆறு பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டதாகவும் வெளிநாட்டு வானொலிச் செய்திகள் தெரிவித்தன. இத்தகவலைத் தெரிவித்த இராணுவ அதிகாரியிடம் பொது மக்கள் கொல்லப்பட்டதாகக் கேட்டபோது "படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையில் நடந்த துப்பாக்கிச் சண்டையின் போது இடையில் பொது மக்களும் அகப்பட்டு இறந்திருக்கலாம்" என்று அந்த அதிகாரி பதிலளித்ததாகவும் அந்தச் செய்திகள் தெரிவித்தன.

"ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதற்கு என்னால் முடியாதே தவிர மற்றபடி நான் எதையும் செய்ய முடியும்" என்று அதி உத்தமர் ஒரு பத்திரிகைப்பேட்டியில் எப்போதோ தெரிவித்ததாகச் செய்தி வெளிவந்திருந்தது.

மீனவர்கள் "பயங்கரவாதிகளாக மாற்றப்படுவது கடினமான காரியமா?

(நன்றி: செய்திக் கதிர்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கையில் இராணுவத்தளம் அமைத்து இந்தியாவைப் பயமுறுத்த முனைகிறது அமெரிக்கா

**"அமெரிக்க ஏகாதிபத்தியம் ஜெயவர்த்தனாவைப் பயன்படுத்தி இலங்கையில் இராணுவத்தளம் அமைத்து இந்தியாவை அச்சுறுத்திப் பணியவைக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறது" என்று அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தின் சார்பில் கோவையிலிருந்து வெளிவரும் "சமாதான வெண்புறா" மாத இதழ் (ஜூலை 86) அதன் தலையங்கத்தில் எழுதியிருக்கிறது.**

இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்ந்து கொன்று குவிக்கப்படுகின்றனர். இலங்கை இரு தேசிய இனங்களுக்குச் சொந்தமான நாடு. சிங்கள தேசிய இனமும், தமிழ் தேசிய இனமும் தொன்று தொட்டுதங்களது தாயகமான இலங்கையில்வாழ்ந்து வருகின்றனர். யாழ்ப்பாணம் - திருகோணமலைப் பிராந்தியங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் இன மக்களின் தாயகம் என்பது வரலாற்று உண்மை.

ஜெயவர்த்தனே அரசு ஒரு வலதுசாரி பிற்போக்கு பழமைவாத அரசு. இரு தேசிய இனங்களுக்கும் பொதுவான அரசாகச் செயல்படுவதற்குப் பதிலாகச் சிங்கள தேசிய இனவெறியைத் தனது தளமாக்கி இயங்கிவரும் அரசாக மாறிவிட்டது. இனவெறி இன அழிப்புக்கு இட்டுச் சென்றுள்ளது. தமிழினம் அழிக்கப்படுவது ஒன்றே இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்று இந்த இனவெறி அரசு நம்புகின்றது. அரசியல் தீர்வுக்குப் பதிலாக இராணுவத் தீர்வைத் திணிப்பது இந்த அரசின் கொள்கை என்பது தெளிவாகிவிட்டது.

இன அழிப்புக் கொள்கை ஏகாதிபத்தியவாதிகளின் கொள்கையாகும். அமெரிக்காவில் தொன்று தொட்டு வாழ்ந்துவந்த செவ்விந்தியர்கள் கொன்று குவிக்கப்பட்டு அவர்களின் வளமான பூமியை ஐரோப்பியர்கள் ஆக்கிரமித்துக் கொண்டதே அமெரிக்க வரலாற்றின் துவக்கம். கறுப்புநிற மக்களை ஆப்பிரிக்காவில் வேட்டையாடிப் பிடித்து அடிமைகளாக்கி அமெரிக்காவிற்குக் கொண்டுசென்று மிருகங்களைப் போன்று உழைக்க வைத்துத் தங்களின் செல்வாதாரங்களைப் பெருக்கிக் கொண்டதுதான் அமெரிக்க செல்வச் சீமான்களின் முன்னேற்றப்பாதை!

இன்றும் தென் ஆப்பிரிக்காவின் தொன்மைக் குடிமக்களான இரண்டு கோடி நீக்ரோக்களை 45 லட்சம் வெள்ளையர்கள் அடித்து உதைத்துக் கொன்று குவித்து மிருகங்களைத் தொழுவில் அடைத்தது போல் அடக்கி ஒடுக்கி இன ஒழிப்பில் ஈடுபட்டிருப்பதற்கு அமெரிக்க ஆதரவே பாதுகாப்பு. தங்களின் தாய்நாடான பாலஸ்தீனத்திலிருந்து அராபிய மக்களை அடித்து விரட்டிக் கடந்த 40 ஆண்டுகளாக இன அழிப்பில் அகங்காரத்துடன் செயல்படும் இஸ்ரேல் ஆட்சியாளர்களுக்கு முழு உதவி, ஒத்துழைப்பு, பாதுகாப்பு அளிப்பது அமெரிக்க ஏகாதிபத்தியமே.

இவைபோன்றே அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது பிறவிக் குணத்திற்கேற்ப தனது கையாளான ஜெயவர்த்தனேயின் ஆட்சிக்கு ஆதரவும் உதவியுமளித்து இனப்படுகொலைக்குப் பட்டாடை போர்த்துகின்றது.

இலங்கையில் இராணுவதளம் அமைத்து இந்தியாவை அச்சுறுத்திப் பணியவைக்கும் ஆக்கிரமிப்பு நோக்குடன் அமெரிக்கா ஜெயவர்த்தனேயைத் தனது ஏவல் நாயாகப் பயன்படுத்துகின்றது. அமெரிக்க இரகசியக் கூலிப்படையைச் சார்ந்த காலிகளும், இஸ்ரேலின் மொசாத் அதிரடிப்படையும், பிரிட்டிஷ் உளவாளிப் பேர்வழிகளும் ஜெயவர்த்தனேயின் இனப் படுகொலைக்கு அடியாட்கள்.

இந்த ஏகாதிபத்திய நிலையை அம்பலப்படுத்தாமல்: முறியடிக்காமல் இலங்கைத் தமிழர்களின் அரசியல் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்ட முடியாது. தங்களது தாயகத்தில் தமிழர்கள் கண்ணியமாகவும் கௌரவமாகவும் சமஉரிமைகளுடனும் வாழக்கூடிய ஒரு நல்ல அரசியல் தீர்வு காண உலகின் அனைத்து முற்போக்கு ஜனநாயக, ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளைத் திரட்டுவது அவசியம். தமிழக மக்களும் ஒன்றுபட்டு நின்று இக்கடமையை நிறைவேற்ற இந்திய அரசை ஊக்குவிக்க வேண்டும்!-

---

**BOOK POST**

PRINTED MATTER

"உறுமல்"

த. பெ. எண்: 928

அடையாறு

சென்னை 20